**சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள்.**

**ந.க.எண்.069381 /கே/இ1/2018 நாள் : 08.2023**

**பொருள்** பள்ளிக் கல்வி – அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் – 10.03.2020க்கு முன்னர் உயர்கல்வித் தகுதி பெற்று ஊக்க ஊதிய உயர்வு பெறாத அனைத்து வகை ஆசிரியர்கள் சார்பான விவரங்கள்/கூடுதல் விவரங்களுடன் **கருத்துருக்களின் விவரப் படிவம் மற்றும் அதன் சுருக்கம் அடங்கிய ஒரு கூடுதல் நகல் தேவைப்படுவதால் அதனை இவ்வியக்ககத்திற்கு** 17/08/2023–க்குள் அனுப்புவதற்கு தெரிவித்தல் – ஊக்க ஊதிய உயர்வு சார்ந்த கருத்துருக்களுக்குடன் சரிபார்ப்பு சான்று அனுப்பக் கோருதல் – சார்ந்து

**பார்வை**

1. அரசுக் கடிதம் எண். 6192/ப.க5(2)/2021–2, நாள்.07. 04.2022, 12.04.2023 மற்றும் 31.07.2023
2. சென்னை–06, பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், ந.க.எண். 069381/ கே/ இ1/2018, நாள்.26/04/2022, 11.05.2022 மற்றும் 31.05.2022.
3. இவ்வலுவலகத்தின் இதே எண்ணிட்ட கடிதம் நாள்.18.11.2022 மற்றும் 02.03.2023.
4. முதன்மைக்கல்வி அலுவலர்களின் ஆலோசனை கூட்டம் ஏப்ரல் –2023 சார்ந்து 04/05/2023 அன்று நடந்த இணைய வழி கூட்டம் இணை இயக்குநர் (தொழிற்கல்வி) கூட்டப்பொருளில் தங்களது மாவட்ட நேர்முக உதவியாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது

......

பார்வையில் கண்டுள்ளவாறு, 10.03.2020–க்கு முன்னர் உயர்கல்வி தகுதி பெற்று, ஊக்க ஊதிய உயர்வு பெறாத ஆசிரியர்களுக்கு, பார்வை 1–இல் காணும் அரசுக் கடிதத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை சரிபார்த்து கூடுதல் தகவல்களை உறுதி செய்வதற்கு, பார்வை (2 & 3)ல் காணும் இவ்வியக்கக செயல்முறைகளில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது. பெறப்பட்ட **கருத்துருக்களின் விவரப் படிவம் மற்றும் அதன் சுருக்கம் அடங்கிய ஒரு கூடுதல் நகல் தேவைப்படுவதால், அதனை இவ்வியக்ககத்திற்கு 17/08/2023–க்குள் அனுப்புவதற்கு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.**

மேலும், ஊக்க ஊதிய உயர்வு சார்ந்த கருத்துருக்களுடன் இணைப்பில் காணும் சரிபார்ப்பு சான்று அனுப்புமாறும், இந்நிகழ்வில் எந்தவித காலதாமதம் மற்றும் நினைவூட்டலுக்கு இடமின்றி செயல்படுமாறும் மீண்டும் வலியுறுத்தி தெரிவிக்கலாகிறது.

**//இது மிகவும் அவசரம்//**

இணைப்பு– மாதிரி சரிபார்ப்பு சான்று

இணை இயக்குநர் (தொழிற்கல்வி)

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்

## சரிபார்ப்பு சான்று

**முதன்மைக்கல்வி அலுவலகத்தின் பெயர்:**

1. 10/03/2020-க்கு முன்னர் உயர்கல்வி தேர்ச்சி பெற்று, ஊக்க ஊதிய உயர்வு பெறாத, ஆசிரியர்களின் விவரங்கள் அரசுக் கடிதம் மற்றும் அறிவுரையின்படி முழுமையாக சரிபார்க்கப்பட்டது.

2. பதவி வாரியாக கருத்துருக்கள் சரிபார்க்கப்பட்டது.

3. கருத்துருக்கள் அனைத்தும் ஊக்க ஊதிய உயர்வுக்கு தகுதியுடையது என்பதால் பரிந்துரைக்கப்பட்டது.

4. _______________ மாவட்டத்தின் சார்பாக அனைத்து வகை ஆசிரியர்களின் ஊக்க ஊதியம் சார்ந்து கீழ்க்கண்டவாறு கருத்துருக்கள் பரிந்துரைக்கப்படுகிறது

| வ. எண் | அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் | |
| 2 | உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் | |
| 3 | முதுகலை ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் நிலை – I / கணினி ஆசிரியர்கள் நிலை – I | |
| 4 | பட்டதாரி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் நிலை –II / கணினி ஆசிரியர்கள் நிலை – II / தொழிற்கல்வி ஆசிரியர்கள் | |
| 5 | இடைநிலை ஆசிரியர்கள் | |
| 6 | சிறப்பு ஆசிரியர்கள் | |
| 7 | மொத்த கருத்துருக்கள் | |

**முதன்மைக்கல்வி அலுவலரின் கையொப்பம் / நாள்:**

**முதன்மைக்கல்வி அலுவலரின் பெயர்:**